REGD. No. M. 6311

THONE No. 55630

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 236

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணுதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF : THE D.P.F

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)	
ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு :	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

சென்னை : பங்குனி 4உ. புதன் (17—3—54) ★ ★ ★ வெளியூர் : பங்குனி 5உ. வியாழன் (18—3—54)

பாதுகாப்பிலாகாவில் ரூ. 3 கோடி பாழ்!

—(:)—

இங்கிலாந்திலுள்ள இந்தியத் தூதுவர் திறமைக் குறைவால் நேர்ந்த நஷ்டம்

—(:)—

திருடு — மோசடி — அலட்சியம் ஆகிய மூன்றினுலேயே இந்த அலங்கோலம்!

புதுடில்லி, மார்ச் 15—

1951—52-ம் ஆண்டின் இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்பு இலாகாவில் ரூ. 3 18 00,000 நஷ்டமேற்பட்டதை 'சச்சுபாக்கி' எழுதி நேர் செய்யப்பட்டுள்ளதாக, கணக்கு வழக்கு தணிக்கை இலாகா அறிக்கையொன்று வெளிப்படுத்தியுள்ளது. இதில் ரூபாய் 3 கோடிக்கு மேல், திருடு, மோசடி, அலட்சியம், இன்னபிற ஒழுங்கீனங்களாலும் ரூபாய் 17 லட்சம் பணமாகவே திருட்டுப் போயும் நஷ்டம் ஏற்பட்டுள்ளன.

மக்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு அறிக்கையின்படி, இந்த நஷ்டம், தனிப்பட்ட இராணுவ அதிகாரிகளின், கணக்குகளை எப்படி வைத்துக் கொள்வது, அதற்கான சட்ட திட்டங்கள என்ன என்று அறிந்தில்லாத தின் விளைவாகவே ஏற்பட்டுள்ளது எனத் தெரிகிறது.

அந்த அறிக்கை, இராணுவ அதிகாரிகளும், இன்னபிற நிர்வாகத் துறை அதிகாரிகளும் நிதிக் கணக்குகளைச் சரிவர வைத்துக் கொள்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென வும் வற்புறுத்தியுள்ளது,

1947—1951 ஆகிய ஆண்டுகளிடையே சாமானகளைச் சேகரித்து வைத்துக் கொள்ளும் போது, போக்குவரத்து சாமான்கள், அணி வகைகள், இராணுவத் தளவாட வகைகள் இவைகளில் ஆமை வேகத்தால் ஏற்பட்டதினுல் ரூ 1,25,00,000 பல்வேறு தளவாட சேமிப்பு நிலையங்களில் 128 நடவைகளில் நஷ்டமாகியுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாலில் தயாரிக்கப்பட்ட பொருள்கள், புட்டிப் பால் இவைகள், இங்கிலாந்திலுள்ள இந்தியத் தூதுவரால் 1951-52-ம் ஆண்டில் ரூ 3 லட்சத்திற்கு வாங்கப்பட்டன.

விசாரணையின்போது, ஒரு கண்டிப்பான டெண்டர் முறை, இந்தப் பால் வாங்கியதில் கடைபிடிக்கப்படவில்லை என்றும், வேறு புதிய இடங்களிலிருந்து இந்தச் சாமான்கள் வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிகிறது.

அந்த அறிக்கை இந்தியத் தூதுவரின் ஏழு முறை இம்மாதிரித் தவறியதை சுட்டிக் காட்டியுள்ளது.

இந்தியப் பொருள் வைக்க இலாக்காவின் விதிகளின்படி, ரூ 5000-த்திற்கு அதிகமான சாமான்கள் வாங்குவதற்கு தூதுவரின் அனுமதியை முன்கூட்டியே பெற்றுகவேண்டும்; ஆனுல், வாங்கப்பட்டுள்ள சாமான்கள், குறிப்பிட்டுள்ள 'அளவு' ரூபாய்க்குமேல் பன்மடங்கா பிருந்தும், ஒரு முறையில் கூட தூதுவரின் அனுமதி பெறவில்லை. அதோடு மட்டுமின்றி, அதிக

(4-ம் பக்கம் பார்க்க)

ஹைட்ரஜன் குண்டு வெடிப்புப் பரிசோதனை

ஜப்பானின் ஆட்சேபம்!

டோக்கியோ, மார்ச் 17—

பசிப்பிக் பகுதியில் இம்மாதம் முதல் தேதி அமெரிக்கா ஹைட்ரஜன் குண்டை வெடித்தபோது 23 ஜப்பானியச் செம்படவர்கள் காயமடைந்ததற்குக் காரணம் என்ன என்று ஜப்பான் சர்க்கார் அமெரிக்காவைக் கேட்டிருக்கிறது.

'மீன் பிடிக்கும் படகுகளுக்கு ஏன் அமெரிக்கா முன்னெச்சரிக்கை செய்யவில்லை?' என்றும் கேட்கப்பட்டுள்ளது.

இது நஷ்ட ஈடு கேட்பதற்கு பூர்வாங்கமான கேள்வி என்று தெரிகிறது.

அமெரிக்கப் பார்வையாளர் பற்றி மீண்டும் பண்டிதர்

ஐ. நா.-வைச் சேர்ந்தவர் அல்லர் என அறிவிக்க முடியாதாம்!

புதுடில்லி, மார்ச் 16—

"ஐக்கிய நாடு சபை பார்வையாளர்களுடன் உள்ள அமெரிக்க இராணுவத் தலைவர்கள் காஷ்மீரில் இருப்பது ஒழுங்காகாது,"

—என நேரு முன் கூறியதை இன்று மீண்டும், பார்லிமெண்டில் வலியுறுத்தினுர்.

"பண்டிதரின் கருத்துப் பற்றி ஐ. நா. சபை செயலாளரும், மற்றவர்களும் கூறிய கருத்துக்களை அவர் அறிவாரா?" என்று ஒரு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு பண்டிதர் கூறிய பதிலாவது :—

"இந்த விவகாரம் நேரடியாக ஐ. நா. சபைக்கும்—இந்தியாவிற்கும் இடையில் உள்ளதாகும். நம்மைப் பொறுத்தவரையில், இதுபற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதில் நமக்குக் கவலை கிடையாது. ஏற்கெனவே நான் குறிப்பிட்டுள்ளதுபோல் ஐ. நா. பார்வையாளர்களோடு அமெரிக்க அதிகாரிகள் காஷ்மீரில் இருப்பது ஒழுங்கல்ல என்பதே நமது கருத்தாகும். எனவே, அவர்கள்மேலும் தொடர்ந்து அங்கு இருப்பது கூடாது இது குறித்து ஐ.நா.சபை செயலாளருக்கு நாம் அறிவுறுத்தி விட்டோம்."

"காஷ்மீரில் இருக்கிற அமெரிக்கப் பார்வையாளர்களை ஐ. நா. சபையைச் சேர்ந்தவர்கள் அல்ல என்று இந்திய சர்க்கார் அறிவித்து விடுமா?" என உறுப்பினர் கேட்டார்.

"காஷ்மீரில் உள்ள அமெரிக்க இராணுவ அதிகாரிகள் ஐ. நா. சபையைச் சேர்ந்தவர்கள் அல்ல என்று அறிவிக்கவேண்டிய நிலை இப்பொழுது ஏற்படவில்லை. தனி நபர் என்ற முறையில் நாம் பார்க்காமல், ஒரு அடிப்படை கொள்கை கண்ணேட்டத்திலேயே, அப் பிரச்னையை நாம் எதிர்த்துக் கொண்டுள்ளோம். அப்படி கருதவேண்டியதில்லை பிறக்குமானுல், நாம் அதையும் மேற்கொள்ளுவோம். தற்சமயம், இந்த விஷயத்தில், அமெரிக்க இராணுவ அதிகாரிகள் ஒருவரையும் நடுநிலையாளர் என்று சொல்லுவதற்கு முடியாத சூழ்நிலை ஏற்பட்டு இருப்பதாக நாம் நினைக்கிறோம்.

"அமெரிக்காவுடன் இராணுவ உடன்பாடு செய்துகொண்டுள்ள அமெரிக்க நேச நாடுகள் விஷயத்திலும், இதே போக்கை இந்திய சர்க்கார் மேற்கொள்ளுமா?" என பொதுவுடைமை

(4-ம் பக்கம் பார்க்க)

ஆடு வெட்டியின் அகிம்சா உபதேசம்!

அதையும் மிஞ்சுகிருர் மந்திரி சுப்ரமணியம்

காங்கிரஸ் பணியில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு சலுகையா?

சென்னை, மார்ச் 16—

"அரசியல் அபிப்பிராயங்களுக்காக ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை; நான் பதவியிலிருக்கும் வரையில் அரசியல் நடவடிக்கைகளில், ஈடுபட்ட ஆசிரியர்கள் பள்ளிக்கூடங்களுக்குள் புகுந்து குழந்தைகளை கெடுப்பதை அனுமதிக்கமாட்டேன்; அம்மாதிரி விபரீதம் ஏற்படாமல் தடுப்பதற்கு என்னுடைய அதிகாரம் பூராவையும் உபயோகிப்பேன்; ஆசிரியர்கள் மூலம் பள்ளிக்கூடங்களில் அரசியல் நடவடிக்கைகளைப் புகுத்துவதைத் தடுக்க வேண்டும்; அரசியல காரணங்களுக்காக பாகுபாடு காட்டுகிறேன் என்று என்மீது குற்றம் சாட்டப்பட்டால் நான் குற்றவாளிதான் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன்,"

—என்று, கவர்னர், மந்திரிகள் சம்பள மானியக் கோரிக்கைமீது சட்டசபையில் நடந்த விவாதத்திற்குப் பதிலளிக்கையில், கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் கூறினுர்.

"காங்கிரஸ் அரசியலில் கலந்து கொண்டவர்களையும் அப்படித் தடுக்க வேண்டுமென்று மந்திரி கருதுகிருரா?" என்று டி. வி. நாராயண நம்பியார் கேட்டார்.

அது சாத்தியமில்லை யென்றும், ஆனுல் எந்தவிதமான அரசியலையும் தவிர்க்க வேண்டும் என்றும் மந்திரி கூறினுர்.

"ஆசிரியர்கள் அரசியலில் கலந்து கொள்ளக் கூடாதென்று நிதி மந்திரி உண்மையாகவே சொல்லுகிருரா?" என்ருர் ராமமூர்த்தி.

நிதி மந்திரி: "காங்கிரஸ், கழகம், பி-சோ. ஆகிய எந்த அரசியல் கருத்துடையவர்களையும் ஆசிரியர்களாகச் சேர்க்கக் கூடாது."

"ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட பிறகு சிலர் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகிருர்கள். கல்வி விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டியிருக்கிறது" என்று அவர் குறிப்பிட்டார்.

★

அரசியல் காரணங்களுக்காக, சிலர்மீது பழி வாங்கப் படுகிறதென்று கம்யூனிஸ்ட் மெம்பர் குற்றம் சாட்டியதைப் பற்றி நிதி மந்திரி விரிவாகக் குறிப்பிட்டார். "எங்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை உண்டு. ஜனநாயகத்தை கீழே இழுத்துத் தள்ள முயற்சிக்கும் எல்லாச் சக்திகளையும் கண்டிப்பாக அடக்கித் தானுக வேண்டும். அத்தகைய நடவடிக்கைகள் சில மெம்பர்களுக்குப் பிடிக்காவிட்டாலும் அதைச் செய்துதானுக வேண்டும். நமது அரசியலமைப்புக்கும், ஜனநாயகத்திற்கும், பாதகம் விளைவிக்கும் வகையில் நடப்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும்போது எங்கள் கடமையைத்தான் செய்கிறோம்.

அவதூறு வழக்கில் ரூ. 10,000 நஷ்ட ஈடு!

பம்பாய், மார்ச் 16—

'பிளிட்ஸ்' என்ற பத்திரிகை ஒரு கட்டுரையில், 'இந்துஸ்தான் டைம்ஸ்' நிர்வாக ஆசிரியர் தேவதாஸ் காந்தியை, 'தேவதாசி' என்று எழுதியிருந்ததைப் பற்றி 'பிளிட்ஸ்' ஆசிரியர் ஆர். கரஞ்சியா மீதும் பிரசுரகர்த்தர் மீதும் தொடரப்பட்டிருந்த அவதூறு வழக்கில் மனுதாரருக்கு பிரதிவாதிகள் ரூ. 10,000 நஷ்டஈடு தரவேண்டுமென பம்பாய் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

பிரதிவாதிகள், செலவு தொகை வேறு கொடுக்க வேண்டுமென்றும நீதிமன்றம் உத்திரவிட்டது.

சென்னை அறநிலையப் பாதுகாப்புச் சட்டம்

சில பிரிவுகள் பற்றி சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு

புதுடில்லி, மார்ச் 16—

1951-ம் ஆண்டு சென்னை அறநிலைய பாதுகாப்புச் சட்டத்தின் பல பிரிவுகள் அரசியல் சட்டத்தின் பிரிவுகளில் காணப்படும் ஜீவதார உரிமைகளுக்கு முரணுனவை என்றும், அவை செல்லத்தக்கதல்லவென்று, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தது.

ஜீவாதார உரிமைகளுக்கு முரணுன சென்னை அறநிலைய பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவுகள் வருமாறு:—

21, 30 (2), 31, 55, 56, 63 முதல் 69 வரை.

மாநில சட்ட சபையின் அதிகார வரம்பிற்கு மீறி 76 (1) பிரிவு இயற்றப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் செல்லத் தக்கதல்ல வென்று ஆட்சேபித்து மனு சமர்ப்பிக்கப்பட்டதின் பேரில் சுப்ரீம் கோர்ட் இவ்வாறு தெரிவித்தது.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 17—3—1954 புதன்

ஆடு உறவு! குட்டி பகை!

காஷ்மீர், பண்டித நேருவின் மூதாதையர் முளைத்த மண். தாம் பிறந்த இடமான உத்திரப் பிரதேசத்தின்பால் பண்டிதருக்குள்ள பற்றைக் காட்டிலும், தமது முன்னோர் தோன்றிய காஷ்மீர் மீதுள்ள பற்று அதிகம் எனக் கூறுவது மிகையாகாது.

இந்தியா—பாகிஸ்தான் நட்புக்குத் தடையாக இருப்பதில் முதலிடத்தில் இருப்பது காஷ்மீர். காஷ்மீர் பிரச்சினையில் முடிவு ஏற்படாத முன்னர் இந்தியா—பாக். இடையே நல்லுறவு ஏற்படும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. காஷ்மீர் தகராறு ஐக்கிய நாடு சபையின் தீர்ப்புக்குக் காத்துக் கிடக்கிறது.

காஷ்மீர் இந்தியாவுடன் இணைவதா, பாகிஸ்தானுடன் ஒன்றுபடுவதா என்பதில் முடிவு கூற வேண்டிய உரிமை கொண்டிருப்பவர்கள் காஷ்மீர் மக்களேயாவர். அந்த நாட்டு மக்களின் தீர்ப்பை ஒப்புக்கொள்ளுவதாக இரு நாடுகளும் வாக்குறுதி அளித்துள்ளன. வாக்கெடுப்பு எப்பொழுது என்பது இன்னும் முடிவாகத் தீர்மானிக்கப்படவில்லை. வாக்கெடுப்புக்குமுன் செய்யப்பட வேண்டிய முன்னேற்பாடுகளிலும் இரு நாடுகளுக்கிடையேயும் ஒருமனப்பாடு இல்லை. ஒன்றை ஒன்று சந்தேகத்தோடு நோக்குவதிலேயே, பிரச்னையில் பைசல் காண முடியாத ஒரு நெருக்கடியான நிலை நீடித்து வருகிறது.

இதற்கிடையில் காஷ்மீரில் உருவாக்கப்பட்டுள்ள அரசியல் ஆக்க மன்றமோ காஷ்மீர்—இந்திய இணைப்புக்கான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி இருக்கிறது. அத்தீர்மானத்தை அப்படியே ஒப்புக்கொண்டு, இந்தியாவும் தீவிரமான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

காஷ்மீர் அரசியல் ஆக்க மன்றம் செய்துள்ள இணைப்புத் தீர்மானம் செல்லத்தக்கதல்லவென்று, இந்தியப் பிரதமர் நேரு அறிவித்துவிட வேண்டும் என பாகிஸ்தான் பிரதமர் பண்டித நேருவுக்கு வேண்டுகோள் விடுகிறார். அதற்கு இந்தியப் பிரதமரோ, காஷ்மீர் பற்றி ஐக்கிய நாடுகள் சபை செய்துள்ள தீர்மானத்தை மதித்து நடக்க இந்தியா எப்பொழுதும் பின்வாங்காது எனவும், பாக்—அமெரிக்கப் போர்ப்படை ஒப்பந்தத்தினால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையைக் கருதி காஷ்மீர் விவகாரத்தை இந்தியா நேர் செய்ய முற்படும் எனவும் இந்தியப் பிரதமர் கூறுகிறார். இந்தப் பேச்சு ஈரொட்டாக இருக்கிறது; மேலும் விளக்கம் தேவை என்கிறார் பாகிஸ்தான் பிரதமர். இரு பிரதமர்கள் உள்ளத்திலும், ஒருவரைப் பற்றி ஒருவருக்கு, அச்சமும் அவநம்பிக்கையும் தோன்றி வேகமாக வளர்ந்துகொண்டு வருகிறது நிற்க,

அமெரிக்கா-பாகிஸ்தானுக்குமிடையில் ஏற்பட்டுள்ள போர்ப் படை உடன்படிக்கையின் விளைவாக, ஐக்கிய நாடு சார்பில், காஷ்மீரில் பஞ்சாயத்தார்களாக உள்ள அமெரிக்கக் குடிமக்கள் இந்தியாவின் நம்பிக்கையை இழந்துவிட்டவர்களாவர் என, பண்டிதர் அறிவித்துவிட்டார். அவர்களின் நடுநிலைமையில் இந்தியப் பிரதமருக்குத் தோன்றியுள்ள ஐயம் நியாயமானதேயாகும். இதை யாரும் குறை கூறமாட்டார்கள். அவர்களைத் திரும்ப அழைத்துக்கொள்ள வேண்டியது அமெரிக்க சர்க்காரின் நீங்காக் கடமையாகும். காஷ்மீரில் ஐக்கிய நாடுகள் சார்பில் உள்ள தங்கள் குடிமக்களை அழைத்துக் கொள்ளும்படி, ஐக்கிய நாடு சபை செயலாளரை அமெரிக்க சர்க்கார் உடனடியாகக் கேட்டுக்கொள்ள வேண்டும் வேண்டிக்கொள்வதோடு மட்டும் நின்றுவிடாது, அவர்களைத் திரும்பப்பெறும் காரியத்தில் வெற்றி காண அமெரிக்கா தீவிரமாக முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்தியாவின் நேர்மையான இந்தக் கோரிக்கையை, தட்டிக் கழிக்கும் வகையில் ஐக்கிய நாடு சபை செயலாளர், காஷ்மீரில் உள்ள அமெரிக்க பஞ்சாயத்தார் பற்றி விதண்டாவாதம் செய்யக் கிளம்பி இருக்கிறார். காஷ்மீரில் ஐக்கிய நாடு சார்பில் பணிபுரியும் அமெரிக்கக் குடி மக்களை, சபையின் ஊழியர்களாக உள்ள வரையில் அமெரிக்கக் குடி மக்களாகக் கொள்ளக் கூடாது என சபை செயலாளர் வழக்காடுகிறார். இந்த வழக்கை அமெரிக்கா கூட நியாயமானது என ஒப்புக்கொள்ளாது. ஐக்கிய நாடு சபையின் ஊழியர்களாக உள்ள அமெரிக்கக் குடிமக்களிடம் 'பொதுவுடைமை நோய்' குடியேறி இருக்கிறதா என ஆராய்ந்து பார்க்க, அதற்காக உள்ள அமெரிக்க சர்க்கார் குழு முன்னர் முயற்சி எடுத்தது. ஐக்கிய நாடு சபையில் வேலை பார்த்துவந்த சில அமெரிக்கர், அக்குழுவின் ஆராய்ச்சிக்கு இணங்க மறுத்தனர். இந்தக் குற்றத்திற்காக, சபையின் முன்னாள் செயலாளர் அப்படி மறுத்தவர்களை பணியிலிருந்து விலக்கியும் இருக்கிறார். விலக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலை தர வேண்டும் என்று, ஐக்கிய நாடு சபை நிர்வாகப் பஞ்சாயத்து செய்திருந்த தீர்மானத்தை நிறைவேற்ற, இப்பொழுதுள்ள சபையின் செயலாளர் மறுத்துவிட்டு, அவர்களுக்கு நஷ்டஈடு வேண்டுமானால் கொடுக்கத் தயார் எனக் கூறியிருக்கிறார். இந்த செயலாளர்தான், காஷ்மீரில் உள்ள ஐ. நா. சபையைச் சேர்ந்த அமெரிக்கர், 'சொந்த நாட்டற்றவர்கள்' என சொத்தை வாதம் புரியக் கிளம்பியுள்ளார்.

ஐ. நா. சபையின் சார்பில் காஷ்மீரில் பஞ்சாயத்தாராக உள்ள அமெரிக்கரின் நடுநிலைமை நோக்கில் இந்தியா சந்தேகம் கொள்வது நியாயமானதே என முன் குறிப்பிட்டுள்ளோம். பாகிஸ்தானுக்கு அமெரிக்காவின் போர்ப் படை வந்து இறங்குவதையும், பாகிஸ்தான் போர் வீரர்களுக்கு அமெரிக்க இராணுவ அதிகாரிகள் பயிற்சி அளிப்பதையும் பார்த்துக் கொண்டு, காஷ்மீரில் உள்ள அமெரிக்கர்கள் நடுநிலைமைக் கொள்கையில் பிறழாது, எப்பொழுதும்போல் இருப்பர் என, நம்ப முடியாது என இந்தியப் பிரதமர் எதிர்பார்ப்பது பொருத்தமானதே. அதை, எதிர்பார்த்து காஷ்மீரில் உள்ள அமெரிக்கப் பார்வையாளர்களை அப்புறப்படுத்த பண்டிதர் முயற்சிப்பதும் வரவேற்கத்தக்கதே!,

ஆனால், பண்டிதர் கொண்டுள்ள புதிய நோக்கு காஷ்மீரில் உள்ள ஐ. நா. பார்வையாளரான அமெரிக்கக் குடிமக்களை மட்டுமே பொறுத்ததா அல்லது இந்தியத் துணைக் கண்டம் முழுதும் உள்ள அமெரிக்கர் அனைவரையும் பொறுத்ததா என்பது விளக்கமாக வேண்டும். அமெரிக்க-பாக் ஒப்பந்தம், காஷ்மீரில் உள்ள அமெரிக்கர்களுக்கு மட்டுந்தான் மனமாற்றத்தை உண்டாக்கும், இந்தியாவின் மற்ற பகுதிகளில் உள்ள அமெரிக்கர்களுக்கு மனமாற்றத்தை உண்டாக்காது எனக் கொள்வதற்குத் துளியும் இடம் கிடையாது: தகராறுள்ள, குழப்பமான, நிலையற்ற பிரதேசமாக காஷ்மீர் இருப்பதால, அங்குள்ள அமெரிக்கர் மட்டும் வெளியேறினால் போதும், மற்றப் பகுதிகளில் உள்ள அமெரிக்கரைக் குறித்து கவலை இல்லை என்று சொல்லப்படுமானால், அதுவும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகாது.

இந்தியத் துணைக்கண்டத்தின் எந்த மூலையில் இருப்பவராக ஒரு அமெரிக்கர் இருந்தபோதிலும், அவருடைய நெஞ்சில், இந்தியாவிற்கு எதிராகவும், பாகிஸ்தானுக்குச் சாதகமாகவும் மனமாற்றம், அமெரிக்கா—பாக். உடன்பாட்டிற்குப் பிறகு ஏற்படத்தான் செய்யும். இதை மறைப்பதோ மறப்பதோ இந்தியப் பிரதமர் தம்மையே ஏமாற்றிக் கொள்வதாக முடியும். காஷ்மீரில் உள்ள அமெரிக்கர்கள் மட்டுந்தான் அலையும் உள்ளம் படைத்தவர்கள், இந்தியாவின் மற்ற இடங்களில் உள்ளவர்கள் நிலைத்த நெஞ்சம் பெற்றிருப்பவர்கள் என்று பண்டிதர் தீர்மானிப்பதாக இருந்தால், இதைக் காட்டிலும் அரசியல் சந்தர்ப்பவாதம் வேறு எதுவும் இருக்க முடியாது என்போம்.

இது வெறும் தடை நடுங்கி வெளிநாட்டுக் கொள்கை என்பதிலும் ஆட்சேபணை இல்லை. பண்டிதரின் இப்போக்கைத்தான் ஆடு உறவும், குட்டி பகையும் என்று நாம் சித்தரித்துக் கூறுகிறோம்.

எகிப்து மாதர் உண்ணாவிரதம்

நகிபுக்கு முன்னுள்ள பெரும் பிரச்னை!

'ஓட்டுரிமை' அளிக்க அவரால் இயலுமா?

கெய்ரோ, மார்ச் 16—

எகிப்து மாதர்களுக்கு 'வோட்டுரிமை' அளிக்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்தி எகிப்திய பெண்கள் பலர் திருமதி டோரியா ஷாபிக் தில்லைமையில் உண்ணாவிரதம் ஆரம்பித்து விட்டனர். சர்க்கரை போடாத எலுமிச்சம் பழ ரசத்தை மட்டும் அவர்கள் அருந்திவருகின்றனர். அவர்களில் ஒருவர் மயக்கமுற்று மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார்.

'ஜனாதிபதி நகிப் நேரில் வந்து தங்களைப் பார்த்து உறுதிமொழி கொடுத்தால் ஒழிய உண்ணாவிரதத்தை நிறுத்தப்போவதில்லை,' என்று ஷாபிக் கூறுகிறார்.

நகிபிடம் இச்செய்தி தெரிவிக்கப்பட்டபோது, 'அத்தகைய உறுதி மொழியை நான் எப்படித் தர முடியும்? அரசியல் நிர்ணய சபை முடிவு செய்ய வேண்டிய விஷயமாயிற்றே அது?' என்கிறாராம்.

ஆழகடலுக்குக் கீழ இரண்டு பாதைகள்!

ஜப்பான் முயற்சி!

டோக்கியோ, மார்ச் 16—

கியூஷூ, ஹான்ஷூ என்ற இரு ஜப்பானியத் தீவுகளை இணைப்பதற்காகக் கடலுக்குக் கீழ் இரண்டு மைல் நீளத்தில் இரண்டு பாதைகள் அமைக்கப்படுகின்றன. பாதைகளுக்கு வேண்டிய சுரங்கங்கள் வெட்டப்பட்டுவிட்டன. 1957-ல் அவற்றில் ஆட்களும், வாகனங்களும் செல்லலாம். பாதைகளில காற்றோட்டம் இருப்பதற்கு விசேட சாதனங்கள் அமைக்கப்படும்.

இரண்டு அடுக்குகளாக இந்தப் பாதைகள் இருக்கும்; மேல் பாதையில் வாகனங்களும், கீழ்ப் பாதையில் பாதசாரிகளும் செல்லலாம். 1937-ல் ஆரம்பிக்கப்பட்ட இவ்வேலை 1944-ல் தடைப்பட்டு இப்போது மீண்டும் நடைபெற்று வருகிறது.

தென்னாட்டு மக்கள் — புறக்கணிக்கப்படவில்லை?

திறமையை அனுசரித்து விசேட வேலைக்கே வடநாட்டினர் நியமனமாம்

நெய்வேலி திட்டம் — தொழில் மந்திரி விளக்கம்

சென்னை, மார்ச் 15—

நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கும் பரீட்சார்த்தத் திட்டம் பற்றிய விவரங்களை சட்டசபையில் கைத்தொழில் மந்திரி விளக்கினார். அவர் சொன்னதாவது :—

பரீட்சார்த்தத் திட்டம் 1953 மார்ச் 5-ந் தேதி ஆரம்பிக்கப்பட்டது. 600 அடி நீளம் 600 அடி அகல விஸ்தீரணத்தில் அவ்வேலை நடைபெறுகிறது அங்கு வெட்டப்படும் சுரங்கங்கள் சராசரி சுமார் 50 அடி ஆழம் கொண்டவை; அதிக பட்ச ஆழம் 90 அடி.

இதுவரை அங்கிருந்து பழுப்பு நிலக்கரி எதுவும் வெளியே எடுக்கப்படவில்லை; ஆனால், அவ்விடத்திற்கு அருகில் 1951 செப்டம்பரில் வெட்டப்பட்ட 10 அடி சுற்றளவு கொண்ட மற்றொரு சுரங்கத்தில் 150 டன் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கப்பட்டது

"ரூ 5 லட்சத்திற்கு இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்படுவதாயும் அவை வந்தவுடன் வேலை துரிதமாக நடைபெறுமென்றும் அவர் கூறினார்.

அந்த வேலைக்குத் தென்னிந்தியர்களைப் புறக்கணித்து, வட இந்தியாவிலிருந்து ஆட்கள் கொண்டுவரப் படுவதாக தெரிவிக்கப்பட்ட புகாரை மந்திரி மறுத்தார். திறமையை அனுசரித்து விசேட வேலைகளுக்கு மட்டுமே அவர்கள் நியமிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

செயற்கை அரிசி உற்பத்தி இயந்திரங்கள்

இந்தியா வரவழைக்குமா?

புதுடில்லி, மார்ச் 16—

செயற்கை அரிசி உற்பத்திக்காக இயந்திரங்கள் வரவழைக்கப்படவிருந்தன; இப்போது நாட்டில் அரிசி உற்பத்தி அதிகரித்திருக்கும்போது, இவைகளை இறக்குமதி செய்ய வேண்டுமா என்ற என்கிற பிரச்னை ஏற்பட்டுள்ளது.

'இப்போது இந்த முயற்சியில் ஈடுபட்டால் அரிசியைப் பதுக்குவது அதிகரிக்கலாம்,' என்று உணவு இலாகா அதிகாரி ஒருவர் கூறுகிறார். இயந்திரங்களுக்கு ஏற்கனவே ஆர்டர் கொடுக்கப்பட்டுவிட்டதால், அதை ரத்து செய்ய இயலாது என்றும் அறிவிக்கப்படுகிறது.

செயற்கை எண்ணெய் உற்பத்தி

ரூ 10 லட்சம் இந்திய சர்க்கார் ஒதுக்கியுள்ளது

புதுடில்லி, மார்ச் 16—

செயற்கைஎண்ணெய் உற்பத்தி விஷயமாக 'லிக்னைட்' மிகவும் பயன்படும் என்று நிபுணர்கள் கருதுகின்றனர். சர்க்கார் இதற்காக ரூ 10 லட்சம் ஒதுக்கியுள்ளனர்.

தெரிந்து கொள்ளுங்கள்

★

1. சென்ற ஆண்டில், இந்தியாவில் மொத்தம் 2,34,24,000 டன் அரிசி உற்பத்தியாயிற்று. வெளி நாடுகளிலிருந்து மொத்தம் 1.90,000 டன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. 1952-ம் ஆண்டில் உற்பத்தி 2,07 41,000 டன்னுகவும் இறக்குமதி 7,22,000 டன்னுகவும் இருந்தன,
2. சம்பால் நதிக்கு குறுக்கே கட்டப் பட்டுள்ள காந்தி சாகர் அணையின் உதவியால் சுமார் 60,000 கிலோவாட்டர் மின்சாரம்: உற்பத்தி செய்யப்படும்.
3 1953-ம் ஆண்டில் இந்தியாவிலிருந்து மொத்தம் 67,8 கோடி கஜம் துணி ஏற்றுமதி செய்யப்பட்டது.
4 நிதிக் கமிஷனின் தீர்ப்பின் முடிவாக, ஐந்து ஆண்டுத் திட்டத்தை அமுல் நடத்திவைப்பதற்கு மாகில சர்க்காருக்கு மேலும் 80 கோடி ரூபாய் வரையில் கிடைத்திருக்கிறது.
5 1953 டிசம்பர் மாதத்தில், தபால்—தந்தி இலாகா மொத்தம் 17,34,28,000 ரூபாய் பெறுமானமுள்ள 49 68,000 மணியார்டர்களைக் கையாண்டிருக்கிறது. 1952 டிசம்பர் மாதத்தில் அனுப்பப்பட்ட மணியார்டர்களைக் காட்டிலும் அது சுமார் 5 சத விகிதம் அதிகமாகும்
6 இ[illegible]ந்தாபன ரீதியில் அமைந்[illegible] உற்பத்திசாலைகளால் ஒவ்வொரு ஆண்டிலும் தயாரிக்கப்படுகிற சோப்புக்களின் பாரசரி பெறுமானம் சுமார் 18 கோடியாகும்,

'தினத் தந்தி' மஞ்சள் பத்திரிகையாக மாறுகிறது!

பொய்ச் செய்திக்கு எம். ஜி. ஆர். நாடக மன்றத்தினர் மறுப்பு

சென்னை, 11-3-54 'தினத் தந்தி' இதழில், 2-வது பக்கத்தில், "எம். ஜி. ராமச்சந்திரன்—ஜி. சகுந்தலா நாடக கோஷ்டியிடம் மதுவிலக்கு சோதனை," என்ற தலைப்பில் ஒரு கட்டுக் கதை வெளியாகியிருக்கிறது.

அதில் காணப்படுகிற நிகழ்ச்சிகள், எங்கு, எப்பொழுது நடைபெற்றது என்பது அந்த 'தினத் தந்தி' நிருபருக்கும், அதைக் கொட்டை எழுத்தில் வெளியிட்டுள்ள ஆசிரியருக்குந்தான் தெரியும் என்று நம்புகிறோம்.

ஏனெனில், எங்கள் நாடகக் குழுவினர் யாரும் இரண்டாவது வகுப்பில் செல்லவில்லை; குறிப்பாக, திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் எங்களுடன் ரயிலில் வரவேயில்லை—எப்பொழுதும் வருவதும் கிடையாது; அன்று, 9-3-54 பிற்பகல் கோவை பட்சிராஜா ஸ்டூடியோவில் படப்பிடிப்பை முடித்துக் கொண்டு, கார் மூலம் புறப்பட்டு இரவு 9-மணிக்கு அறந்தாங்கி வந்து சேர்ந்தார்.

ஆனால், 'தினத் தந்தி' நிருபரின் கண்களில், எம். ஜி. ஆர். அவர்கள், இண்டோ-சிலோன் எக்ஸ்பிரசில், இரண்டாவது வகுப்பில் போலீசாரின் சோதனைக்கு ஆளானது எப்படியோ மாயமாய் தென்பட்டிருக்கிறது.

இப்படி நடைபெறாத விஷயங்களை 'செய்தி'யாக்கி, பொறுப்பற்ற முறையில், விஷமத்தனமாக, நிருபர் என்ற பெயரில், யாரோ அனுமதேயம் அனுப்புவதும், அதைப் பிரமாதமாக, சம்பந்தமில்லாத விளம்பரத் தலைப்புகளுடன் வெளியிடுவதும் 'தினத் தந்தி'க்குப் பத்திரிகை விற்பனையை அதிகப்படுத்துவதற்கு மார்க்கமாகவும்—அப்படியே பழக்கமாகியும் விட்டிருக்கலாம்; ஆனால், சம்பந்தப்பட்டவர்களும், பொதுமக்களும் அதை அனுமதிக்க முடியாது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

"9—3—'54-ந் தேதி காலை 8-மணி அளவில், அறந்தாங்கி செல்லும், திருவாரூர்—காரைக்குடி பாசஞ்சர் வண்டியில், மூன்றாவது வகுப்பின்—ஒரே கம்பார்ட்மெண்டில் எங்கள் நாடகக் குழுவினர் அனைவரும் சென்றோம்—தோழர் எம். ஜி. சக்ரபாணி அவர்களைத் தவிர—வண்டி அதிராம்பட்டினம் ஸ்டேஷனில் நின்ற சமயம், பிளாட்பாரத்திற்கு மறுபுறமாக உள்ள கதவைத் திறந்து கொண்டு, ஒரு போலீஸ்காரர் உள்ளே ஏறினார்.

உடனே, அங்கிருந்த இரண்டொரு தோழர்கள், 'என்ன?' என்றதும், 'ஒன்றுமில்லை' என்று கூறிக்கொண்டே கீழே இறங்கிவிட்டார். இதுதான் நடந்தது."

இதைத்தான் கதையாக்கி அனுப்பி இருக்கிறது ஒரு அனுமதேயம்—அதை 'சினிமா நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனிடம் போலீஸ் சோதனை' என்ற கொட்டை எழுத்து விளம்பரத்துடன், 'பத்திரிகை விலை போகாதா?' என்று வலை விரித்துப் பார்த்திருக்கிறார் 'தினத் தந்தி' ஆசிரியர்!

இது சம்பந்தமாக, 'தினத் தந்தி'க்கு விளக்கமான கடிதம் எழுதினோம்—பதில் இல்லை; எனவேதான், மஞ்சள் பத்திரிகைகளின் பட்டியலிலே 'தினத் தந்தி'யும் ஒன்றாக மாறுவதைப் பற்றி நாங்கள் கவலை கொள்ளவில்லையானாலும், திடீர் வேட்டுகளால், பொதுமக்களின் மனதைக் குழப்பும் பணியில், இனிமேலாவது 'தினத் தந்தி' ஈடுபடாமலிருக்க வேண்டும் என்று எச்சரிப்பதற்காக, பொதுமக்களுக்கு இதை அறிவித்துக் கொள்கிறோம். பொதுமக்களும், 'தினத்தந்தி'யின் இத்தகைய தகாத முறையைக் கண்டித்து, தங்களது கண்டனங்களை அனுப்ப வேண்டுகிறோம்.

நரிகளுக்கு இரையான 70 வயது மூதாட்டி!

உயிருடன் விழுங்கியதைக்கண்ட மகளின் துடிப்பு!

மங்களூர், மார்ச் 16— கொடக்காடு என்ற கிராமத்தின் ஒதுக்குப் புறத்தில் இருந்த ஒரு குடிசையில் வசித்து வந்த 70 வயதுள்ள ஒரு மூதாட்டியை இரண்டு குள்ள நரிகள் குடிசையினுள் புகுந்து உயிருடன் சாப்பிட்டுவிட்டன. மரணத்துடன் போராடிய அம்மூதாட்டியின் முனகல் சப்தம் வெளியில் யாருக்கும் கேட்கவில்லை.

தண்ணீர் கொண்டுவரச் சென்றிருந்த அம்மூதாட்டியின் 50 வயது மகள் திரும்பி வந்து பார்க்கையில், தன்னுடைய தாய் குள்ள நரிகளுக்கு இரையாகிக் கொண்டிருந்த பரிதாபக் காட்சியைக் கண்டு திடுக்கிட்டார்.

தாயைக் காப்பாற்ற அப்பெண்மணி, உணர்வு மேலிட்டு நரிகளிடம் போரிட்டார்; அவர் இட்ட கூக்குரலினால், பக்கத்திலிருந்தவர்கள் ஓடிவந்து ஒரு நரியைச் சுட்டு வீழ்த்தினர்; மற்றொன்று தப்பி ஓடிவிட்டது. காயங்களுடன் அப்பெண்மணி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

கைப்பற்றப்பட்ட கள்ளத் தங்க அளவு!

புதுடில்லி, மார்ச் 15— கோவாவிலிருந்து கடத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் 15,850 தோலா எடையுள்ள கள்ள தங்கத்தைச் சுங்க அதிகாரிகள் சமீபத்தில் கைப்பற்றியதாக உதவி நிதி மந்திரி மக்கள் சபையில் தெரிவித்தார்.

எகிப்துக்கு ஜப்பான் ஆயுதங்கள்?

டோக்கியோ, மார்ச் 15— ஜப்பானிடம் எகிப்து சில ஆயுதங்கள் வாங்கக்கூடும் எனத் தெரிகிறது. ஜப்பான் தளவாட தொழிற்சாலைகளை இரு எகிப்திய அதிகாரிகள் சமீபத்தில் பார்வையிட்டதாகக் கூறப்படுகிறது.

மெல்போர்ன், மார்ச் 16— ஆஸ்திரேலியாவில் நவம்பர் மாத கடையில் 10 கோடி புஷல் கோதுமை உபரியாக இருக்கும் என்றும், அதற்குள் புது அறுவடை வேறு ஏற்பட்டுவிடும் என்று அறிவிக்கப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★

தஞ்சை மாவட்ட

2-வது தி. மு. கழக மாநாடுகள்

A. Y. A. நாடார் அவர்கள் தோட்டத்தில் நடைபெறும்

★

10—4—54 சனி:

சமூக சீர்திருத்த மாநாடு

தலைவர்:
தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.

திறப்பாளர்:
தோழர் க. அன்பழகன், எம். ஏ.

★

11—4—54 ஞாயிறு

அரசியல் மாநாடு

தலைவர்:
தோழர் என். வி. நடராசன்

திறப்பாளர்:
தோழர் ஈ. வெ. கி. சம்பத்

★★★★★★★★★★★★★★★★★

பொடி டப்பி ஏலம்!

ரூ. 2 லட்சத்திற்கு விலை போயிற்று

எகிப்தின் முன்னாள் மன்னர் பரூக்கின் வைரம் பதித்த தங்கப் பொடி டப்பி கெய்ரோவில் 15,375 பவுனுக்கு (ரூ. 1,99,875) ஏலத்தில் விற்கப்பட்டது. ஒரு பொடி டப்பி இதுவரை இவ்வளவு விலைக்கு போனதில்லை.

பரூக்குக்கு இந்தப் பொடி டப்பியை விற்றவரே இதை வாங்கிக் கொண்டார்; தான் விற்ற மற்றொரு ஆபரணத்தையும் இந்த வியாபாரி 11,780 பவுன் கொடுத்து வாங்கிக்கொண்டார்.

பரூக்கின் கலைச் செல்வங்களிலிருந்து ஏலம் போடப்பட்ட பொருள்களிலிருந்து நான்காவது நாளாகிய இன்று 60,076 பவுன் ரூ. (8,06 988) வசூலாயிற்று. இதுவரை கிடைத்துள்ள மொத்த பணம் ரூ. 28 லட்சத்துக்கு மேலாகும்.

விமானத்தைத் தாக்கிய பருந்து!

கல்கத்தா, மார்ச் 15— கூச்பீகாரிலிருந்து கல்கத்தாவுக்கு வந்துகொண்டிருந்த டகோட்டா விமானத்தை ஒரு பருந்து தாக்கிவிட்டது; விமானத்தின் ஒரு எஞ்சின் பழுதாகிவிட்டதென்றாலும், எவ்வித அசம்பாவிதமுமின்றி விமானம் கீழே இறங்கிவிட்டதாம்!

க்ஷயரோகத்தைத் தடுக்க முயற்சி

புதுடில்லி, மார்ச். 14— இந்தியாவில பி. சி. ஜி. ஊசி போடும் ஏற்பாடு 1943-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, 1954 ஜனவரி மாத இறுதி வரை, மொத்தம் 2,06,000 பேருக்கு க்ஷயரோகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர். பரிசோதிக்கப்பட்டவர்களில் சுமார் 85 லட்சம் பேருக்கு பி. சி. ஜி. ஊசி குத்தப்பட்டது.

1954 ஜனவரி மாதத்தில் மாத்திரம் மொத்தம் 11,27,107 பேர் க்ஷயரோகப் பரிசோதனைக்குட்பட்டனர்; இவர்களில் 4,06,768 பேருக்கு பி. சி. ஜி. ஊசி குத்தப்பட்டது.

புதுடில்லி, மார்ச். 14— 1953-ல் ரூபாய். 4,23,00,000 வரையில் பெறுமானமுள்ள பங்குகள் வெளியிடுவதற்கு வெளி நாடுகளில் வசிப்பவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டதென்றும், சம்பந்தப்பட்ட தொழில்களின் எண்ணிக்கை 21 என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேலம்-திருச்சி மாவட்டத்தில் இரும்புக்கனிச் சுரங்கங்கள்

125 ஆண்டுகட்குமுன் அங்கு நடந்த தொழிற் நிலையத்தின் சாதனைகள்

புலம்பட்டியில் காணப்படும் சரித்திரச் சான்றுகள்

புதுடில்லி, மார்ச் 14—

"சேலம், திருச்சி மாவட்டத்தின் சில பகுதிகளில் இரும்புக்கனிச் சுரங்கங்கள் ஏராளமாக இருக்கின்றன; தேவையான நிலக்கரியும், மின்சார வசதியும் இருந்தால் ஒரு பெரும் தொழிற்சாலையைத் துவங்கலாம்,"

—என்ற கருத்துக்களைத் தெளிவாக்கி டாக்டர் எம். எஸ். கிருஷ்ணன், திரு. என். கே. என். அய்யங்கார் ஆகிய இருவரையும் கூட்டாசிரியர்களாகக் கொண்டு, 'சேலத்தில் இரும்புக்கனி' என்ற தலைப்பில் இந்திய அரசாங்கத்தின் பூகோளத் தத்துவ இலாக்கா, ஒரு சிறிய புத்தகம் வெளியிட்டுள்ளது. அப்புத்தகத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:—

"சுமார் 125 ஆண்டுகளாகவே, சேலம், திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள இரும்புக்கனிகள் மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளன. கிழக்கிந்திய வியாபாரக் கம்பெனியிலிருந்த ஒரு சிவில் உத்தியோகஸ்தரின் முயற்சியினால், தற்போதுள்ள மேட்டூர் அணையிலிருந்து காவிரிக் கரையின் 10 மைல் தொலைவில் உள்ள புலம்பட்டியில் இரும்பு உருக்கும் தொழில் நிர்மாணிக்கப்பட்டது. இன்னும் அன்று காய்ச்சி உருக்கப்பட்ட இரும்புத் துண்டுகளின் மிச்சம் மீதிகள் இப்போதுள்ள காவிரியின் மேட்டூர் நீர்த்தேக்கத்தின் அருகில் காணப்படுகின்றன.

1830-ல் புலம்பட்டியில் துவக்கப்பட்ட அந்த இரும்பு உருக்கும் தொழிற்சாலையில், புலம்பட்டியிலிருந்து 35 அல்லது 40 மைல் தூரமுள்ள கஞ்சா மலைப் பிரதேசத்தில் சிதறலாகக் கிடைத்த 'மாக்னடைட்' என்னும் கனியும் உபயோகப்படுத்தப்பட்டது. புலம்பட்டியிலிருந்து 16 மைல் தொலைவில் உள்ள சோழப்பாடியில் காட்டுக் கரியும் ஏராளமாகக் கிடைத்தது. என்றாலும், அந்த இரும்பு உருக்கும் தொழில் பல்வேறு இன்னல்களுக்கு உட்பட்டது. அவைகளுள், நிரந்தரமாக, காட்டுக்கரி கிடைப்பதில் இருந்த குறை, பறங்கிப்பேட்டைத் துறைமுகத்திற்கு உருக்கிய இரும்பை எடுத்துச் செல்ல அதிகமாக இருந்த போக்குவரத்துச் செலவு அந்த இரும்பு விலையாக்கப்பட்டு வந்த இங்கிலாந்தில் இரும்பு விலை இறக்கம் ஆகியனவும் சில. எனவே, 1858ல், அத்தொழில் கைவிடப்பட்டது. இந்த முயற்சிதான், சேலத்தின் இரும்புக் கனிகளை பெரும் அளவில் உருக்கச் செய்யப்பட்டவைகளில் மிகப் பெரியது.

இந்த நூற்றாண்டின் துவக்கத்திலும் கூட சிறுசிறு உலைக்கூடங்கள், சேலம், திருச்சி ஆகிய இடங்களில் கிடைக்கும் இரும்பை உருக்கி எடுக்க முயற்சித்த ஸர் தாமஸ் ஹாலண்ட் என்பவர் '1890ல் இரும்புத் தொழில் வளர்ச்சி' என்பது பற்றி விளக்கங்கள் பல தந்திருக்கிறார். அவர், சுற்று வட்டாரங்களில், காட்டுக்கரியும் நிலக்கரியும் எந்த அளவு கிடைக்கக் கூடும் என்பது பற்றியும் ஆராய்ந்தறிந்து அறிவித்திருக்கிறார். சென்னை அரசாங்கம் அப்போது, ஒரு புதிய இரும்பு உருக்கும் தொழிற்சாலையை சேலத்தருகில் நிர்மாணிக்க எண்ணினும் கூட அதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து செய்யவில்லை.

சேலத்திலும் வடமேற்கு மாவட்டங்களிலும், 'மாக்னடைட்' என்னும் பொருளும் ஸ்படிகக் கற்களும் கலந்த ஏராளமான இரும்புக் கனிகள் இருக்கின்றன.

இவைகளை உருக்கி இரும்பாக்குவதற்கு தடையாயிருப்பது என்று கருதப்படுவது சென்னையில் போதுமான நிலக்கரியும் மின்சார வசதியும் இல்லாதிருப்பதே.

சேலம் இரும்புக் கனிகளைப் பற்றிய இத்தகு சரித்திரக் குறிப்புகளையும் அரசாங்கத்தின் மேற்சொன்ன புத்தகம் கொண்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

'சவுந்திரபாண்டியன்'

செல்லப்பம்பட்டி தி. மு. கழகப் பொருளாளர் தோழர் செ. மா. இரத்தினம் அவர்களுக்கு 22—2—54ல் பிறந்த ஆண்குழந்தைக்குப் பெயரிடுவிழா 7-3-54 அன்று தோழர் ச. முத்துவேட்டுவன் தலைமையில் நடைபெற்றது. குழந்தைக்கு "சவுந்திர பாண்டியன்" எனப் பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது - வரப்பெற்றோம்-நன்றியுடையது - பொறுப்பாளர்.

* * *

'பன்னீர் செல்வம்'

1—3—54 திங்கட்கிழமை காலை செங்குன்றம் தி. மு. கழக உறுப்பினர் தோழர் பாலகிருஷ்ணன் மனைவியார் தோழியர் வள்ளியம்மைக்கு ஒரு ஆண்மகவு பிறந்து, 'பன்னீர் செல்வம்' என்று பெயரிடப்பட்டது. அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று அன்பளிப்பாக அனுப்பப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

திருமணங்கள்

7—2—54 காலை 6 மணிக்கு தென்திருப்பேரையில் தோழர் ச. சுப்பையா அவர்களுக்கும்—தோழியர் முத்துரத்தினம் அவர்களுக்கும், மணமகன் இல்லத்தில் திருமணம் நடந்தேறியது. திருமணத்தின் நினைவாக "நம் நாடு" வளர்ச்சிக்கு மணமக்களால் ரூ 2 அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றியுடையது—பொறுப்பாளர்.

* * *

8—3—54 அன்று தோழர் சின்னப்பனுக்கும் — தோழியர் முத்தம்மைக்கும் நாமக்கல் நம்மாழ்வார் பள்ளி ஆசிரியர் தோழர் எஸ். அப்துல் ரஹீம் அவர்கள் தலைமையில் திருத்திய திருமணம் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி தோழர்கள் மு. செங்கசாமி, எம். முத்துசாமி ஆகியோர் பேசினர். திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. ஒன்று மணமக்களால் அனுப்பிவைக்கப்பட்டது—வரப் பெற்றோம்-நன்றியுடையது—பொறுப்பாளர்.

'பாங் மீன்' என்கிற ஒருவகை கடல் மீன் சென்னை சர்க்காரின் ஆலோசனையின் பேரில் உத்தர பிரதேச குளம், குட்டைகளில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. உணவு சத்தில் 'அயோடின்' இல்லாததால் ஏற்படக் கூடிய நிலைமையை இந்த மீன் உணவு போக்கக் கூடியதாம்.

முன்னாள் பிரதமர் தோற்றார்!

கிழக்கு வங்காளத் தேர்தல் நிலைமை

டாக்கா, மார்ச் 16—

கிழக்கு வங்கத்தில் சில தினங்களுக்கு முன்வரை லீக் மந்திரி சபையில் பிரதம மந்திரியாக இருந்தவரும், மாநில முஸ்லிம் லீக் தலைவருமான நூருல் அமீன், கிழக்கு வங்க அசெம்பிளித் தேர்தலில், மாணவர் தலைவரும் ஐக்கிய முன்னணி அபேட்சகருமான கலீக் நவாஸ் அவர்களால் தோற்கடிக்கப்பட்டார்.

நவாசுக்கு 18,086 ஓட்டுக்களும், அமீனுக்கு 11,079 ஓட்டுக்களும் கிடைத்தன.

நூருல் அமீன் மந்திரிசபையில் கல்வி மந்திரியாயிருந்த அப்துல் அமீது ஐ. மு. அபேட்சகர் முகம்மது அப்துல்லாவால் தோற்கடிக்கப்பட்டார்.

முகம்மது அப்துல்லாவுக்கு 21,081 ஓட்டுக்களும் அப்துல் அமீதுக்கு 5,357 ஓட்டுக்களும் கிடைத்தன.

சிராஜ்கஞ் தொகுதியில் அ. நி. மெம்பரும், கல்கத்தாவில் பாகிஸ்தான் டெப்டி ஹை கமிஷனராயிருந்தவருமான அப்துல்லா அல் மகம்மது ஐ. மு. அபேட்சகர் மகம்மது மன்சூர் அவர்களால் தோற்கடிக்கப்பட்டார்.

மகம்மது மன்சூருக்கு 21,558 ஓட்டுக்களும் அப்துல்லா அல் மகமமதுவுக்கு 2,269 ஓட்டுக்களும் கிடைத்தன.

இதுவரை ஐ. மு. சார்பில் 51 அபேட்சகர்களும் லீக் சார்பில் 2 அபேட்சகர்களும் தான் வெற்றி அடைந்திருக்கின்றனர்.

பல இடங்களில் லீக் அபேட்சகர்கள் படு தோல்வி அடைந்திருக்கின்றனர். இது வரை 10 இடங்களில் லீக் அபேட்சகர்கள் ஜாமீனை இழந்திருக்கின்றனர்.

★

அ. நி. சபையைக் கலைக்கக் கோரிக்கை!

அலாமி லீக் தலைவர் எச்சரிக்கை

டாக்கா, மார்ச் 16—

"பாகிஸ்தான் அ. நி. சபையை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சபை ஏற்பட வேண்டும்," என்று அலாமி லீக் தலைவர் எச். எஸ். சுகரவர்த்தி கோரியுள்ளார்.

"பாகிஸ்தான் சுதந்திரத்தை உத்திரவாதம் செய்யும் அரசியல், பாகிஸ்தான் மக்கள் அனைவரின் சம்மதத்தையும் பெற்றதாக இருக்க வேண்டும்; ஆகவே, அரசியலைத் தயாரிக்கும் சபையில் மக்கள் அனைவருக்கும் பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும்; இல்லாவிட்டால் வீண் சர்ச்சைகளுக்கு இடமேற்படும்" என்றும் அவர் தெரிவித்தார்.

திரு—கொச்சியில் பி.-சோ. மந்திரி சபை

★

திருவனந்தபுரம், மார்ச் 16—

68 வயதுள்ளவரும், 1927 முதல் பொது வாழ்வில் ஈடுபட்டவரும், 1938 முதல் 1947வரை திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸ் தலைவராக இருந்தவரும், 1947-ல் திரு-கொச்சியில்அமைக்கப்பட்ட காங்கிரஸ் ஆட்சியில் முதன் மந்திரியாக இருந்து, பின்னர், தன் சகாக்களுடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமையின் காரணமாக அப்பதவியிலிருந்து விலகி சோஷலிஸ்ட் கட்சியில் சேர்ந்தவருமான பட்டம் தாணுப் பிள்ளை, திரு—கொச்சி ராஜப் பிரமுகர் பிரதம மந்திரியாக நியமனம் செய்திருக்கிறார்.

பதவிப் பிரமாணம் செய்து கொடுத்துவிட்டு அவர், முதன் மந்திரியாக பணியாற்றத் தொடங்கிவிட்டார். இரண்டொரு தினங்களில் தன் மந்திரி சபை குழுவினரின் பெயர்களை அறிவிப்பார்.

பாஸ்போர்ட் : மத்திய சர்க்காரே வழங்கும்!

புதுடில்லி, மார்ச் 16—

நிர்வாக வசதியை முன்னிட்டு பாஸ்போர்ட் வழங்கும் வேலையை மாநில சர்க்கார்களிடமிருந்து மத்திய சர்க்காரே மேற்கொள்ளுவது விரும்பத் தக்கது என்று முடிவுக்கு வந்துவிட்டதாக மக்கள் சபையில் வெளி நாட்டிலாகா உதவி மந்திரி தெரிவித்தார்.

தற்போது மாநிலத்திற்கு ஒன்றாக பாஸ்போர்ட் வழங்கும் காரியாலயங்கள் 27 இருக்கின்றன இதை 5 பிரதேச காரியாலயங்களாக ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

உடையப்பா மறைவு இரங்கற் கூட்டம்

பாகனேரியில் கடையடைப்பு

எஸ். ஒ. எஸ். பி உடையப்பா எம். எல். ஸி., அவர்கள் காலமானதை யொட்டி 13—3—54 மாலை 6 மணிக்கு பாகனேரியில் ஓர் இரங்கற் கூட்டம், திரு. ஆர். வி. சுவாமிநாதன், எம். எல். ஏ, தலைமையில் நடைபெற்றது. அன்று பூரண கடையடைப்பு செய்யப்பட்டது. கூட்டத்துக்கு முன் மக்கள் ஊர்வலமாக வந்து மோதிலால் சதுக்கத்தில் திரளாகக் கூடினர். அவ்வமயம் தலைவரும், தோழர்கள் ஸி. த கண்ணப்பன், வெ. முத்தையா, நா சுப்பிரமணியன், மு. கணபதி, பெரி. நாச்சியப்பன் மு. கார்த்தி ஆகியவர்களும் காலஞ்சென்ற உடையப்பா அவர்களின் குண நலன்களையும், அரசியல் மேதையையும், தன்னலமற்ற சேவையையும் எடுத்துக் கூறினர். பின்னர் அனைவரும் எழுந்து நின்று கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"திரு எஸ். ஒ எஸ் பி. உடையப்பா அவர்கள் திடீரென்று காலமானது குறித்து இக்கூட்டம் பெரிதும் துக்கம் அடைகிறது; அவர்களின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது; அன்னாருக்கு ஓர் நினைவுச் சின்னம் நிறுவும் முயற்சியில் பொது மக்கள் அனைவரும் பங்கெடுத்துக் கொள்ளும்படி இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது."

கோவிலடி தி. மு. கழகம்

3—3—54 இரவு 9 மணிக்கு பொதுக் குழு கூட்டம், கழகக் கட்டிடத்தில், தோழர் இரா. ஆதிராச தலைமையில் நடைபெற்றது. அதுபோது, கழக துவக்கம் முதல் 28—2—54 முடிய வரவு—செலவு கணக்குகள் சரி பார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

'பொறுமைக்கு சோதனையா?'

கோவா நிலைமை மோசமாகிறது?

புது டில்லி, மார்ச் 16—

"கோவாவில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் சம்பவங்கள், பொறுமையை மிகவும் சோதிக்கத் தான் செய்கின்றன," என்று, மக்கள் சபையில் இந்திய பிரதம மந்திரி குறிப்பிட்டார்.

"கொஞ்ச கால தாமதம் ஆனாலும், இந்தியாவில் உள்ள அந்நிய திட்டுகள் பிரச்னையை அமைதியான முறைகளில் தீர்ப்பதே சிறந்த வழி என்று நம்புகிறோம்," என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் புது மில்கள்

லாகூர், மார்ச் 16—

பஞ்சாபில் மட்டும் 11 பருத்தி, கம்பளி மில்கள் சென்ற ஆண்டு ஏற்படுத்தப் பட்டுள்ளதென்றும், இவை எல்லாம் தனிப்பட்டவர்களாலேயே ஆரம்பிக்கப்பட்டதென்றும் தெரிகிறது பஞ்சாபில் மூன்று சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்த பாக். சர்க்கார் அனுமதியளித்திருக்கிறதாம்.

உப்புத் தொழிலாளர் பொதுக்கூட்டம்

அத்துக்குடி, மார்ச் 16—

12—3—54 மாலை 6 மணிக்கு தோழர் எஸ். கே. குழந்தைவேல் தலைமையில், ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தொழிலாளர் சம்பளப் பிரச்னைகளைக் குறித்து தோழர்கள் கே. தானமுத்து, வே ஏகாம்பரம், ஆ. வேலாயுதம், வெ. அருணாசலம் ஆகியோர் பேசிய பின், யுத்தம் முதல் தொழிலாளர்களுக்கு தினசரி சம்பளம் ரு. 1—14—0 கொடுக்கும்படி கேட்டுக்கொண்டும், மூட்டை சுமை தொழிலாளர்களைப் பாதிக்கக் கூடிய 2½-மணங்கு மூட்டைகளை உடனே நிறுத்த வேண்டுமென கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பொன்மலை திருக்குறள் கழகம்

28—2—54-ல் நடந்த கூட்டத்தில் இக்கழகத்திற்கு தோழர் உத்திரா அரங்கத்தாசு அவர்களைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது:— மு ஆறுமுகம் துணைத் தலைவர்; புலவர் இளங்கண்ணனூர் செயலாளர்; ஆ. மா. தனக்கோடி துணைச்செயலாளர்; இரகமத்துல்லா, கே. நாராயணன், எல். இராமானுசம், இராமலிங்கம், சுப்பராசு ஆகியோர் செயற்குழு உறுப்பினர்கள். ஞாயிறு தோறும் காலை 10½-மணி முதல் 12 மணி வரை திருக்குறள் வகுப்பும், வெள்ளி தோறும் இரவு 7 முதல் 8 வரை திருக்குறள் சொற்பொழிவும் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

பொன்விளைந்தகளத்தூர் திருவள்ளுவர் கழகம்

3—3—54 மாலை 6-30 மணியளவில் தோழர் பி. ஸி. ஏகாம்பரம் தலைமையில் தோழர் சேரன் கழகத் திறப்புவிழா வாற்றினார். தோழர்கள் க. மா. சம்பத்து தலைவராகவும், ம. மு. செல்வம் செயலாளராகவும், க. செல்லமுத்து பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கழகக் கூட்டம்

★

தேவபாண்டலம்

20—3—54 மாலை 5 மணிக்கு

இடம் : திரு வி. க. பந்தல்

தலைவர் :

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.

பேசுவோர் :

மு. கருணாநிதி

காஞ்சி கல்யாணசுந்தரம்

சென்னை தி. மு. கழக செயற் குழுக் கூட்டம்

★

"20—3—54 சனி மாலை 6 மணிக்கு, இராயபுரம் தலைமை நிலையத்தில் சென்னை மாவட்ட செயற் குழுக் கூட்டம் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் வருகைதர வேண்டுகின்றேன்," என, சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் அறிவிக்கிறார்.

விளையாட்டு விழா

★

சென்னை, புதுவண்ணை, திருவொற்றியூர் பெரியசாலை, நகராண்மைக் கழக உயர்தர ஆரம்பப் பள்ளி:—18-3-54 வியாழன் மாலை 3 மணியளவில் "விளையாட்டு விழா" நடைபெறும். திரு. பி. தங்கராஜ் தலைமை வகிப்பார். திரு. டி. சங்கரதாம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

திருமணம்

19—3—54 வெள்ளி காலை 8-30 மணி அளவில், தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில், தோழர் ரா. முனுசாமி அவர்கட்கும்—தோழியர் ராணி அம்மைக்கும், 226, நடு தெரு, கலியாண மேஸ்திரி தோட்டம், குடிசையில் திருமணம் நடைபெறும். தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன், தோழியர் அலமேலு அப்பாதுரை ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

அமெரிக்கப்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் கேட்டார்.

"நாம் இப்பொழுது அமெரிக்கப் பார்வையாளர்களைக்குறித்து ஈடுபட்டு இருக்கிறோம். கேள்வி கேட்ட உறுப்பினரோ, அதை, மற்ற தேசங்களிடத்தில் அனுசரிக்கச் சொல்லுகிறார். துரதிருஷ்டவசமாக, உலகில் உள்ள சில நாடுகள்தான், ஏதாவது ஒரு கருத்தில் தொடர்பு கொள்ளாமல் இருக்கின்றன."

ஐ நா. சபை சார்பில் காஷ்மீரிலும், ஜம்முவிலும் இருந்து வருகிற பார்வையாளர் குழுவில், 18 அமெரிக்க இராணுவ அதிகாரிகளும் 3 சிவில் அதிகாரிகளும் உள்ளனர். 1954 மார்ச் முதல் தேதியன்று, காஷ்மீர் இந்தியப் பகுதியில் 10 அமெரிக்க இராணுவ அதிகாரிகளும், ஒரு அமெரிக்க சிவில் அதிகாரியும், அந்தப் பக்கத்தில் 6 இராணுவ அதிகாரியும் ஒரு சிவில் அதிகாரியும் இருந்தார்கள். டெல்லியிலும் ராவல்பிண்டியிலும் தலைமை அலுவலகப் பணிக்காக இரண்டு இராணுவ அதிகாரியும், ஒரு சிவில் அதிகாரியும் இருந்தனர். ஒவ்வொரு பகுதியிலும் குறிப்பிட்டத் தொகையினர்தான் இருக்க வேண்டும் என்ற ஏற்பாடு கிடையாது. ஒரு பக்கத்தில் இருந்து மற்றொரு பக்கத்திற்கு அவர்கள் போக வர இருப்பார்கள்.

கட்டாக், மார்ச் 16—

தீண்டாமையை அறவே ஒழித்துக்கட்ட ஒரிசா சர்க்கார் இந்திய நிதி உதவியுடன் சில திட்டங்களை மேற்கொள்வர்.

பாதுகாப்பிலாகா...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மதிப்புடைய டெண்டர்களை ஏற்றுக் கொள்ளும்போது, பொருளாதார ஆலோசகரின் அங்கீகாரமாவது பெறப்பட்டதா என்றால் அதுவும் இல்லை. இதனால் சர்க்காருக்கு குறிப்பிடத்தக்க அதிகச் செலவு ஏற்பட்டிருப்பதாயும் விசாரணை அறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது.

இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகளில் கல்நார் சிமெண்ட் அட்டைகள் வாங்குவதற்காகச் செய்யப்பட்ட ஒப்பந்தங்களை நிறைவேற்றிய ஒப்பந்த அதிகாரிகள், இங்கிலாந்து நாட்டைக் காட்டிலும் இத்தாலி நாட்டின் கல்நார் சிமெண்ட் அட்டைகளின் விலை அதிகமாயிருப்பதற்கான காரணங்களைக் கண்டறிய எந்தவித முயற்சியும் செய்யவில்லை.

இதில், இந்தியப் பொருள் வைப்பு இலாக்கா டைரக்டர்-ஜெனரல் அதிகாரிகளின் மேற்பார்வை திருப்திகரமானதாயிருக்கவில்லை. கல்நார் சிமெண்ட் அட்டைகள் இங்குகொண்டு வரப்படும்போது பல உடைந்து போனதினாலும் இந்திய அரசாங்கத்திற்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டது.

1950-ம் ஆண்டு ஏப்ரல் 3-ந் தேதியன்று ஒரு வாகனக் கிடங்கில் தீப்பிடித்ததின் விளைவாக ரு 67 லட்சம் நஷ்டமேற்பட்டது. இதுபற்றி விசாரணை செய்த விசாரணைமன்றம்கிடங்கு நிர்வாகத்தினரின் அறியாமை, திறமையின்மை, அலட்சிய மனப்பான்மை இவைகளினால்தான், தீ ஓரிடத்திலேயே அணைக்கப்படாமல் பரவி பெரும் நஷ்டத்தை உண்டுபண்ணியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அந்த விசாரணை அறிக்கை. ரு. 750-க்கு இரண்டு ஆவிர் பொருள் வைக்கும் ரிப்ரிஜிரேட்டர்களை, அதிகாரமின்றி இரண்டு பிரதம இஞ்சினியர்கள் விற்பனை செய்ததையும், அசோக சக்கரங்கள் செய்த வகையில் ரு 1 லட்சம் தேவையில்லாது அதிகச் செலவு செய்ததையும் ஆக இம்மாதிரி ஒழுங்கீனங்களையும் சுட்டிக் காட்டியுள்ளது.

பாதுகாப்பு இலாக்கா, விசாரணையில் வெளிவந்துள்ளவைகளுக்கு பதில் உடன் தருமாறு தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தும் இன்னும் பல, நிர்வாகத் துறை அதிகாரிகள், வேறு பிறரிடமிருந்தும் முடிவான பதில் இன்னும் வந்தபாடில்லை என்றும் அறிக்கை கூறுகிறது.

1951—52-ல் ரு 1.4 லட்சத்திற்காகப் பெறப்பட்ட உபரி அனுமதி 'தேவையில்லாததும் அதிகமான'துமாகும் என்று, சிலவினங்களில், 'நிர்வாகக் குறைவி'ருப்பதாக எடுத்துக் காட்டியுள்ளது.

வாரம் ஒருமுறை கோழிக் கறி சாப்பிடலாம் என்ற உத்திரவை மீறி அளவுமீறிய ஆசையால் இந்திய விமானப்படையைச் சேர்ந்த இரு குழுவினர் ஒன்றுவிட்டு ஒரு நாள் கோழிக் கறி சாப்பிட்டதால் ஏற்பட்ட அதிகச் செலவு ரு. 23,952 என்று தணிக்கையாளர்கள் கண்டுபிடித்ததால் அவர்கள் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாகியிருக்கின்றனர். விமானப் படையின் மற்றொரு பிரிவினர் அளவுக்கு அதிகமாகப் பாலைப் பருகிய விஷயமும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா.நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அறிவகம் அச்சகத்தில் அச்சிட்டப்பெற்று (24, ஜெகநாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.